# தி.மு.க. உருவாக்கிய எழுத்தாளன்

**1978**ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், மாலை நேரம், தென்னாற்காடு மாவட்டம், திட்டக்குடி வட்டம், மங்களூர் ஒன்றியம், கழுதூர் கிராமத்தில் ஒரு கூட்டம் நடந்தது. கூட்டத்தைக் கூட்டியவர் மெட்ராஸ் பூக்கடையை ஒட்டி பந்தர் தெருவிலுள்ள பழக்கடையில் கூலியாக வேலை செய்துகொண்டிருந்த சின்னசாமி. கூட்டத்தில் பங்கேற்றவர்கள் ஆறாம் வகுப்பு முதல் பதினோராம் வகுப்புவரை படித்துக் கொண்டிருந்த மாணவர்கள்.

"கலைஞர்தான் நம்ப சனங்களுக்கு நல்லது செய்வாரு. நாம்ப இப்ப உட்கார்ந்திருக்கிற இந்த வீடுகூட அவர் கட்டித் தந்ததுதான். நாம்ப கலைஞர் கட்சியில இருந்தாதான் குடித்தெருவுல சைக்கிளில போக முடியும். செருப்புப் போட்டுக்கிட்டு போக முடியும். தோளில துண்டு போட்டுக்கிட்டு போக முடியும். குடித்தெரு டீக்கடையில டீ குடிக்க முடியும். டீ குடித்த தம்ளரக் கழுவி வைக்க வேண்டியதில்ல. நம்ப ஆளுங்களுக்குத் தனி தம்ளர் இருக்காது. தரையில உட்கார்ந்து இட்லி சாப்பிடாமல, பெஞ்சில உட்கார்ந்து இட்லி சாப்பிடலாம். பண்ணை வேல செய்ய வேண்டாம். என்னை மாதிரி மீசையும், கிருதாவும் வச்சிக்கலாம். கட்சி வேட்டி கட்டிக்கலாம். கட்சித் துண்டு போட்டுக்கலாம். அதனால நீங்கயெல்லாம் கட்சியில சேந்துக்கிறிங்களா?" என்று கேட்டார்.

கலைஞர் கட்சியில் இருந்தால் எப்படித் குடித்தெருவில் செருப்புப் போட்டுக்கொண்டு போக முடியும். சைக்கிளில் உட்கார்ந்து கொண்டு போக முடியும். தோளில் துண்டு போட்டுக்கொண்டு போக முடியும். டீக்கடையில் எப்படி டீ குடித்த தம்ளரைக் கழுவாமல் வைக்க முடியும்? தோளில் துண்டு போடுவதற்கும், மீசை வைத்துக்கொள்வதற்கும், கிருதா வைத்துக்கொள்வதற்கும், கலைஞருக்கும், கலைஞரின் கட்சிக்கும் என்ன சம்பந்தம்? தெரியாது. கலைஞர் யார், தி.மு.க. என்றால் என்ன, கட்சி என்றால் என்ன? தெரியாது. கட்சியில் ஏன் சேர வேண்டும்? எதுவும் தெரியாது. கூட்டத்திலிருந்த இருபது, இருபதைந்து மாணவர்களில் ஏழாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த அண்ணாமலை என்ற பையன் எழுந்துநின்று கைகளைக் கட்டிக் கொண்டு சொன்னான்.

"நான் கட்சியில சேந்துக்கிறன்."

"நல்லப் பையன்" என்று சொன்ன சின்னசாமி மற்ற பையன்களிடம் "வேற யாரு கட்சியில சேந்துக்கிறது?" என்று கேட்டார். எல்லாப் பையன்களுமே கட்சியில் சேர்வதாகக் கையைத் தூக்கிக் காட்டினார்கள். ஆளுக்கொன்றாக கலைஞர் படம்போட்ட பேட்ஜை சின்னசாமி கொடுத்தார்.

இரவு ஒன்பது மணிக்கு சின்னசாமியின் வீட்டிற்குச் சென்ற அண்ணாமலை, "நான் கட்சியில சேரணும். என்னெ சேத்துக்குங்க" என்று சொன்னான். "காலையில வா" என்று சொல்லி அனுப்பி வைத்தார் சின்னசாமி. வீட்டிற்கு வந்த அண்ணாமலைக்குத் தூக்கமே வரவில்லை. கலைஞர் என்பவர் யார்? கலைஞர் கட்சி என்றால் எனனவென்று யோசித்துக்கொண்டே தூங்கிப்போனான்.

மறுநாள் காலையில் சின்னசாமியின் வீட்டிற்குச் சென்றான். "திட்டக்குடி போ. பஸ்ஸ்டாண்டை ஒட்டி கிழக்கால இருக்கிற இட்லி கடைக்கிப் போயி ஒன்றியச் செயலாளர் ராசுவ பாக்கணும்னு சொல்லு. அவர் இருக்கிற எடத்த சொல்வாங்க. அவர்கிட்ட கட்சியில சேருறதுக்கு உறுப்பினர் பாரத்த நான் சொன்னன்னு சொல்லி வாங்கிக்கிட்டு வா" என்று ஒரு வாடகை சைக்கிளை எடுத்துக் கொடுத்தார். கழுதூரிலிருந்து திட்டக்குடி இருபது கிலோமீட்டர். சைக்கிளில் தனியாகச் சென்று இட்லிக் கடையில் விசாரித்துவிட்டு, இரண்டு கிலோமீட்டர் தள்ளி ஆற்றோரமாக இருந்த செங்கல் சூளைக்குச் சென்று ராசுவைப் பார்த்தான்.

"கட்சியில சேரணும். அதுக்கு பாரம் வேணும். சின்னசாமி அனுப்புனாரு" என்று அண்ணாமலை சொன்னதைக்கேட்ட ராசு வாய்விட்டுச் சிரித்தார். "நீயா கட்சியில சேரப் போற? நீ கட்சியில சேந்து என்னா செய்யப் போற?" என்று கேட்டார். பிறகு இட்லிக் கடைக்கு அழைத்து வந்து பெஞ்சில் உட்கார வைத்து நான்கு இட்லியும், கண்ணாடி போட்ட மரப்பெட்டியில் அடக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு செட் பூரிக்கிழங்கும் வாங்கிக் கொடுத்தார். அவனுடைய வாழ்க்கையில் முதன் முதலாக ஓட்டலில், அதுவும் பெஞ்சில் உட்கார்ந்து இட்லியும் பூரிக்கிழங்கும் சாப்பிட்டது அன்றுதான். உறுப்பினர் படிவங்களைக் கொடுத்து, சைக்கிள் வாடகை ஒண்ணே கால் ரூபாயும் கொடுத்து, தோளில் தட்டிக்கொடுத்து, "போயிட்டு வா" என்று அனுப்பி வைத்தார் ராசு. மேல்சாதிக்காரர் (முதலியார்) ஒருவர் அவனுடைய தோளில் தட்டிக் கொடுத்தது அன்றுதான்.

உறுப்பினர் சேர்க்கை படிவங்களைக் கொண்டுவந்து சின்னசாமியிடம் கொடுத்தான். படிவங்களை வாங்கி ஒரு படிவத்தில் முதல் பெயராக அவனுடைய பெயரை எழுதி, பதினெட்டு வயதாகப் போட்டு, கையெழுத்து வாங்கினார். மற்ற நபர்களின் பெயர்களை எழுதி, அவர்களிடம் கையெழுத்து வாங்கி கட்சியின் தலைமையகமான அன்பகத்திற்கு இருபத்து ஐந்து ரூபாய் மணிஆர்டரையும், உறுப்பினர் படிவங்களையும் அனுப்பி வைத்தார். அன்றுதான் கழுதூர் காலனியில் தி.மு.க.வின் கிளைக்கழகம் உருவாயிற்று. மூன்று,நான்கு மாதங்கள் கழித்து போஸ்ட் கார்டு அளவில் உறுப்பினர் அட்டை வந்தது. தன்னுடைய பள்ளிச்சான்றுகளுக்கு இணையான மதிப்பில் அந்த உறுப்பினர் அட்டையை இன்றும் பொக்கிஷமாகப் பாதுகாத்து வைத்திருக்கிறான்.

1980இல் விருத்தாசலம் அரசு பள்ளி மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு இந்திரா காந்தியும், கலைஞரும் வருவதாகக் கேள்விப்பட்டு வாடகை சைக்கிளை எடுத்துக்கொண்டு தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்திற்குப்போனான். தூரத்திலிருந்தவாறே கலைஞரைப் பார்த்தான். வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டை, கறுப்புக் கண்ணாடி - இது மட்டும் கலைஞராகத் தெரிந்தார். இந்திரா காந்தி என்ன பேசினார், கலைஞர் என்ன பேசினார் என்பது தெரியாது. அந்தக் கூட்டத்தில் இந்திரா காந்தியின் பேச்சைத் தமிழில் மொழிபெயர்த்தவர் - அப்போதைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் எல். இளையபெருமாள். 1980இல் நடைபெற்ற தேர்தலின்போதுதான் **"நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சி தருக"** என்ற பிரயோகத்தை கலைஞர் பயன்படுத்தினார் என்பதை பின்னாட்களில் தெரிந்துகொண்டான்.

மங்களூர் சட்டமன்றத் தொகுதியில் 1980இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக காமராஜ் என்பவர் போட்டியிட்டார். அப்போது காங்கிரஸிற்குபசுவும் கன்றும் சின்னமாகத் தரப்பட்டிருந்தது. அச்சின்னம் அச்சடிக்கப்பட்ட காகிதக் கொடியைத் தெருக் கூட்டும் விளக்குமாறு குச்சியில் பசைதடவி ஒட்டிக்கொடுத்துத் தெருதெருவாகச் சென்று, "போடுங்கம்மா ஓட்டு. பசுவும் கன்றும் சின்னத்தைப் பார்த்து" என்று கத்திவிட்டு வரச் சொன்னார் சின்னசாமி. அவர் சொன்னபடியே தேர்தல் முடியும்வரை ஒவ்வொரு நாள் சாயங்காலமும் தெருத்தெருவாகச் சென்று கத்திவிட்டு வரும்போது கலைஞர் படம் போட்ட பேட்ஜ் ஒன்று கிடைக்கும். ஓட்டு போடுகிற அன்று நான்கு இட்லியும் ஒரு வடையும் கிடைத்தது.

சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் டாக்டர்குழந்தைவேலுவுக்கும், அடுத்துவந்த மங்களூர் சட்டமன்றத் தேர்தலில் வானூர்



முத்துவேலுவிற்கும்,அதன்பிறகு வந்த சட்டமன்றத் தேர்தலில் கோவிலூர் பொன்னுசாமிக்கும், விளக்குமாறு குச்சியில் ஒட்டிய உதயசூரியன் கொடியுடன் தெருத்தெருவாக ஓடிச் சென்று, "போடுங்கம்மா ஓட்டு, உதயசூரியன் சின்னத்தைப் பார்த்து" என்று கத்தினான். அதோடு சைக்கிளில் சென்றும் ஊர்ஊராகப் பிரச்சாரம் செய்தான். 1985இல் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் திருச்சி என். சிவாவுக்கு மன்னார்புரம் பகுதியில் ஓட்டு கேட்டு பிரச்சாரம் செய்தான்.

1989இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு திருச்சி மேலப் புதூர் பாலக்கரைக்கு கலைஞர் வந்தபோது தாமதமாகப் போனால் இடம் கிடைக்காது, கலைஞரைப் பார்க்க முடியாது என்று இரவு ஏழு மணிக்கே போய் உட்கார்ந்துவிட்டான். கலைஞர் வந்தது விடியற்காலை நான்கு மணிக்கு. அந்தத் தேர்தலின்போதுதான் **"என்னைத்**



எழுத்தாளர்
**இமையம்**

**தூக்கிக் கடலில் போட்டாலும் உங்களுக்குக் கட்டு மரமாவேன். சிதறுத் தேங்காயாக உடைத்தாலும் உங்களுக்குச்சுவைமிகு தின் பண்டமாவேன்"** என்ற முழக்கத்தை வைத்தார். 1989இல் நடந்த பொதுத் தேர்தலில் N.T.ராமாராவுடன் இணைந்து தமிழகம் முழுவதும் கலைஞர் பிரச்சாரம் செய்தார். விருத்தாசலத்தில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்திற்கும் அண்ணாமலை போனான்.

1980இல் ஆரம்பித்து 2016 மே மாதத்தில் நடந்த சட்டமன்றத் தேர்தல்கள்வரை எல்லாத் தேர்தல்களிலும் பிரச்சாரம் செய்திருக்கிறான். கட்சி ஜெயித்தபோது உச்சபட்ச மகிழ்ச்சியும், கட்சி தோற்றபோது உச்சபட்ச துயரத்தையும் அனுபவித்திருக்கிறான்.

கலைஞர் என்றாலே போராட்ட அறிவிப்புகள்தான். 1984க்குப் பிறகு கட்சி அறிவித்த எல்லா போராட்டங்களிலும் கலந்துகொண்டிருக்கிறான். எந்தப் போராட்டத்திலும் பெயருக்காகக் கலந்துகொண்டதில்லை. சலித்துக் கொண்டோ, அலுப்புடனோ கலந்து கொண்டதில்லை. கடைசியாக அறிவித்த 'நீட்' தேர்வுக்கு எதிரான மனித சங்கிலிப் போராட்டத்திலும் 18.08.2017இல் நடந்த விவசாயிகளுக்கு ஆதரவு போராட்ட கூட்டத்திலும்கூட கலந்துகொண்டான். 1986இல் நடத்திய சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் பங்கேற்று கடலூர் மத்திய சிறைச்சாலையில் 18நாட்கள் இருந்ததோடு - இதுவரை மொத்தம் 38 நாட்கள் சிறையில் இருந்திருக்கிறான்.

1984க்குப் பிறகு கட்சி நடத்திய மதுரை, சேலம், கோவை, திருச்சி, விழுப்புரம் என்று எல்லா மாநாடுகளுக்கும் போய் இருக்கிறான். திருமணமான பிறகு மனைவியுடனும், பிறகு குழந்தைகளுடனும் மாநாட்டிற்குச் சென்றிருக்கிறான். கடைசியாக 2016 தேர்தலுக்கு முன்பு திருச்சியில் நடைபெற்ற மாநாட்டிற்குத் தன்னுடைய இரண்டு மகன்களையும் அழைத்துக்கொண்டு ஏழு கிலோமீட்டர் தூரம் நடந்தே சென்றான்.

1980க்குப் பிறகு விழுப்புரம், கடலூர், சிதம்பரம், விருத்தாசலம் என்று எந்த ஊருக்கு கலைஞர் வந்தாலும் அந்த நிகழ்ச்சிக்குப் போகாமல் இருந்ததில்லை. 1991இல் மண்டல கமிஷன் நாயகன் என்று சொல்லி சென்னை முதல் கன்னியாகுமரிவரை பிரதமர் வி. பி.சிங்கை சாலை வழியாக அழைத்துக் கொண்டு வந்தபோது - மூன்று நாட்கள் வி.பி. சிங்கை வரவேற்பதற்காக வேலை செய்தான்.

வெற்றிக்கொண்டான் கூட்டத்திற்குப் போய் விட்டு வரும் ஒவ்வொருமுறையும் மனதிலும், உடம்பிலும் புதுத்தெம்பும், உற்சாகமும் வரும் என்பதைத் தன் உடலாலும், மனதாலும் உணர்ந்திருக்கிறான். டேப்-ரிக்கார்டர் நடைமுறை பழக்கத்திற்கு வந்தபிறகு வெற்றிக் கொண்டான் பேசிய பொதுக்கூட்ட மேடைப் பேச்சை கேசட்டாக வாங்கிவந்து திரும்பத்திரும்பப்போட்டுக் கேட்பதும், சிரிப்பதும், கைத்தட்டுவதும் அவனுக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தரக்கூடியது.

**கட்சியில் உறுப்பினராகச் சேர்ந்து நாற்பத்தேழு ஆண்டுகளாகிவிட்டாலும் கட்சியில் இன்றும் அவன் சாதாரண உறுப்பினர்தான். வார்டு செயலாளர், கிளைச் செயலாளர் என்ற பதவியில்கூட இதுவரை இருந்ததில்லை. 1984-1987 காலகட்டத்தில் ஈழ விடுதலைக்கு ஆதரவாக தி.மு.க.நடத்திய போராட்டத்திற்கு முன்னணியில் நின்று திருச்சி பெரியார் கல்லூரி மாணவர்களையும், மற்றக் கல்லூரி மாணவர்களையும் ஒருங்கிணைத்த லால்குடி திருநாவுக்கரசும், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்ச்செல்வனும் 1991இல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.சார்பில் போட்டியிட்டுத் தோற்றார்கள். திருநாவுக்கரசுட னும், தமிழ்ச்செல்வனுடனும் இணைந்துதான் போராட்டத்தில் ஈடுபட்டான். சிறை சென்றான். ஆனால் அவன் இதுவரை கிளைச் செயலாளர் தேர்தலில்கூட நின்றதில்லை. அவனைப் போன்று எந்தப் பதவிக்கும் போகாத, போக முடியாத பல லட்சம் தொண்டர்கள் இன்றும் கட்சியில் இருக்கவே செய்கிறார்கள். அதுதான் கலைஞரின் பலம். தி.மு.க. வின் பலம்.**

ஓட்டுப் போட ஆரம்பித்ததிலிருந்து கட்சிக்கும், கட்சி ஆதரித்த கட்சிக்கும்தான் ஓட்டுப் போட்டிருக்கிறான். உள்ளாட்சித் தேர்தலில் கூட ஊரைப் பார்த்து, உறவுப் பார்த்து, சாதி பார்த்து ஓட்டுப் போட்டதில்லை, அவனுக்குக் கட்சி முக்கியம்.

வாஜ்பாய் தலைமையிலான பி.ஜே.பி. அரசுக்கு தி.மு.க. ஆதரவளித்தபோதும், சட்டமன்றத் தேர்தலில் பி.ஜே.பி.க்கு ஐந்து எம்.எல்.ஏ. சீட்டுகளை ஒதுக்கியபோதும் கலைஞர்மீது அவனுக்கு கோபம்தான். வருத்தம்தான். ஆனாலும் தலைவர் சொல்லிவிட்டார் என்பதற்காக பி.ஜே.பி.யை ஆதரித்தான். மங்களூர் சட்டமன்றத் தொகுதியையும், சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியையும் கூட்டணிக்கு ஒதுக்கும்போதெல்லாம் "தலைவர் என்ன கட்சிக்காரன் கையை உடைத்துவிட்டார்" என்று ஆதங்கப்படுவான். அதற்காகத் தேர்தல் வேலையை அவன் செய்யாமல் இருந்ததில்லை.

1978க்குப் பிறகு கலைஞருக்கு யாரெல்லாம் எதிரியோ, கட்சிக்கு யாரெல்லாம் எதிரியோ அவர்களெல்லாம் அண்ணாமலைக்கும் எதிரிகள். எம்.ஜி.ஆரை அவனுக்குத் தெரியாது. அவருக்கும் அவனைத் தெரியாது. தனிப்பட்ட பகையோ, விரோதமோ இருவருக்கும் கிடையாது. ஆனால் கலைஞரைவிட நூறு மடங்கு அதிகமாக எம்.ஜி.ஆரை அவன் வெறுத்தான். அவர் நடித்த சினிமாப் படங்களைப் பார்க்கமாட்டான். 1989க்குப் பிறகு எம்.ஜி.ஆரை வெறுத்தது போலவே ஜெயலலிதாவையும் வெறுத்தான். எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் கலைஞரின் எதிரிகள். அதனால் அவனுக்கும்எதிரிகள். இன்றுவரை எம்.ஜி.ஆரையும், ஜெயலலிதாவையும், அ.தி.மு.க.வையும் அவன் ஏற்றுக்கொண்டதே இல்லை. டி.ராஜேந்தர் தி.மு.க.வில் இருக்கிறார் என்பதற்காகவே அவர் எடுத்த சினிமா படங்களைப் பார்த்திருக்கிறான். 1987இல்இரவு இரண்டாவது ஆட்டம் பார்த்துவிட்டு திருச்சி மாரீஸ் தியேட்டரிலிருந்து மன்னார்புரம் வரை நடந்தே வந்திருக்கிறான்.

இன்றும் விருத்தாசலத்திலோ, அதன் சுற்று வட்டாரத்திலோ எங்குக் கட்சிக்கூட்டம் நடந்தாலும் தன்னுடைய மகன்களை அழைத்துக் கொண்டு போய்விடுவான். போகாமல் இருந்தால் எதையோ இழந்த மாதிரி இருக்கும். கூட்டத்திற்கான அழைப்பிதழ் தர மாட்டார்கள், கூட்டத்திற்கு வா என்று கூப்பிட மாட்டார்கள், ஆனாலும் அவனாகத்தான் போவான். அவனாகத்தான் கட்சி வேட்டியை 1984 முதல் கட்டிக்கொண்டிருக்கிறான்.

பஸ் பயணத்தில், ரயில் பயணத்தில் கலைஞரைப்பற்றி, தி.மு.கவைப்பற்றி யாராவது குறை சொன்னால் சண்டைக்குப் பாய்ந்து விடுவான். தன்னுடைய அப்பா, அம்மாவைக் குறை சொன்னால், திட்டினால்கூட அவனால் பொறுத்துக்கொள்ள முடியும். ஆனால் கலைஞரை, தி.மு.க.வைக் குறை சொன்னால், திட்டினால் அவனுக்கு உயிர் போவதுபோல் இருக்கும். அதிலும் 'கருணாநிதி' என்று மொட்டையாக யாராவது சொன்னால் சொன்னவரை வெட்டிச்சாய்க்க வேண்டும்போல் கோபம் வரும்.

அவன் 1978 முதல் இன்றுவரை கட்சியில் இருக்கிறான் சாதாரணக் கட்சிக்காரனாக இல்லை. பித்துப் பிடித்த கட்சிக்காரனாக. இதை எழுதிக்கொண்டிருக்கும் போதுகூட கட்சி வேட்டிக் கட்டிக்கொண்டிருக்கிறான்

இன்று வெறும் அண்ணாமலை அல்ல, எழுத்தாளர் இமையம். எழுத்தாளனாகிவிட்டதால் தன்னை தி.மு.க.காரன் இல்லை என்று சொல்வதில்லை. அப்படிச் சொல்வதை இழிவு என்றே கருதுகிறான். கலைஞரின் பெயராலும், தி.மு.வின் பெயராலும்தான் சமூகத்தின் இழிவுகள் ஒழிக்கப்படும் என்று முதன் முதலாக அவனுக்குச் சொல்லித் தரப்பட்டது.

**கட்சிக் கூட்டத்திற்கு வா, கட்சிக்காரன் கல்யாணம் வா, கட்சிக்காரன் செத்துவிட்டான் வா என்று சாதி பார்க்காமல் அழைத்தது தி.மு.க.க்காரர்கள்தான். அவனை மேடையில் உட்கார வைத்தது, மேடையில் பேச வைத்தது, மற்றவர்களுக்கு மேடையில் துண்டுபோட வைத்தது, மற்றவர்கள் அவனுக்குத் துண்டு போட வைத்தது - தி.மு.க மேடைதான்.**

**முதன்முதலாக சமூகம் சார்ந்த முதல் விதையை அவனுக்குள் விதைத்தது, மொழி சார்ந்த சிந்தனையை அவனுக்குள் கொண்டு வந்தது தி.மு.க.வின் மேடை பேச்சுதான். இவை இரண்டும்தான் அவனை எழுத்தாளனாக்கியது.**

மாநாட்டிற்கு, பொதுக் கூட்டத்திற்கு, பிரச்சாரத்திற்கு கலைஞர் வரும்போதெல்லாம், அவருடைய கார் அருகில் வந்ததும் உயிரே நின்றுவிடும் அளவுக்குக் கூட்டம் கத்தும். அவனும் கத்துவான். அப்படிக் கத்தும்போது உடலிலும், மனதிலும் அப்படி ஒரு மகிழ்ச்சி பொங்கும். இப்போதும் அப்பத்தான் மகிழ்ச்சிப் பொங்கக் கத்துகிறான்.

"டாக்டர் கலைஞர் வாழ்க."

---

## குவைத்தில் – தி.மு.க. அயலக அணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம்!

### குவைத் தி.மு.க. அயலக அணி பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது!

குவைத், ஆக. 10–

குவைத் நாட்டில் தி.மு.க., அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி மற்றும் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா (முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர்) ஆகியோரின் வழிகாட்டுதலின் படி, தி.மு.க, அயலக அணி, குவைத் பொறுப்பாளர் சிதம்பரம் ந. தியாகராஜன் ஒருங்கிணைப்பில், அமைப்பின் பொருளாளர் புதுவை அ.அறிவுமணி தலைமையில் நவீன தமிழகத்தின் சிற்பி தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு அமைப்பின் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, இணைச் செயலாளர்கள் குடந்தை சி.தியாகராஜன், ஆயங்குடி ஜா.சையது முஸ்தபா, சேகரை வெ. செல்லத்துரை. துணைச் செயலாளர்கள் திருவாரூர் ச.குமார், முத்துப்பேட்டை ம.சபரிவாசன், விழுப்புரம் ஐ.ஜஹாங்கிர், தகவல் தொழில் நுட்ப அணி செயலாளர் மேட்டுவிளை ஜ.ஜானவாஸ், பொறியாளர் அணி செயலாளர் திருக்கோவிலூர் அ. பொன்முடி, ஓட்டுனர் நல அணி செயலாளர் திருச்சி ஏ.ஜே.எம்.இஷாக் ஜக்கரியா, தொழிலாளர் நல அணி செயலாளர் கூத்தாநல்லூர் ஏ. ஷாகுல் ஹமீது, விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் பரங்கிப் பேட்டை ம.நசுருதீன் முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அமைப்பின் துணைப் பொருளாளர் திருவடத்தனூர் ஏ.எஸ்.முகமது ரஃபீக் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் அமைப்பின் இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் விழுப்புரம் எஸ்.அம்ஜாத் கான், குடந்தை த.மணிகண்டன், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் ராமநாதபுரம் பைசான் அலி, தொண்டரணி செயலாளர் தானிப்பாடி சே.அஷ்ரப் அலி, தொண்டரணி துணைச் செயலாளர் உடையார்பாளையம் எஸ்.செந்தில் குமார், பொறியாளர் அணி துணைச் செயலாளர் மருதூர் ம.பிரேம்குமார், விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர்கள் ஆத்தூர் ஜான் பாஷா, கோட்டை பி.மோதிலால், ஓட்டுனர் நல அணி துணைச் செயலாளர்கள் திருவாரூர் திருவரங்கன், லட்சுமாங்குடி சசிகுமார், சுற்றுச் சூழல் அணி துணைச் செயலாளர் குடந்தை ஆர்.முருகன், மகளிர் அணியை சேர்ந்த அரியலூர் சௌமியா பாஸ்கர், பொறியாளர் பாஸ்கர், இந்திய தூதரகப் பணியாளர் மற்றும் சமூக சேவகர் ஷாஜகான், குவைத் தளபதி பேரவை நிர்வாகிகள், அலி டிரான்ஸ்போர்ட் உரிமையாளர் கொடுந்துறை எஸ். முகமது அலி , கூட்டணி கட்சிகளான வி.சி.க, ம.தி.மு.க., த.வா.க, த. மு.மு.க., நிர்வாகிகளும், தமிழ் அமைப்புகளான வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் நல சங்கம் & அறக்கட்டளை, கலகலப்பு நண்பர்கள் குழு, நந்தவனம், கூடல் நகர் தோழமைக் குழுமம் , உதவும் கரங்கள் லைப் ஸ்டைல் தமிழ் வளையொலி மற்றும் சமூக நல அமைப்புகளின் பிரதிநிதிகளும் உறுப்பினர்களும் பொதுமக்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பேசிய அனைவரும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் புகழினை போற்றினர். மேலும் தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த திட்டங்களால் தமிழன் தலைநிமிர்ந்தான் என்றும், போராட்டமே வாழ்வெனக் கொண்டவர் இறுதிவரை போராடி வெற்றி கண்ட போராட்ட நாயகன் என்றும் போற்றி புகழ்ந்தனர். கலைஞரின் வழியில் இன்று கழகத் தலைவர் தளபதி அவர்கள் வெகு சிறப்பாக ஆட்சியை நடத்தி வருகிறார் என்றும், 2026 ஆம் ஆண்டு நடக்க இருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் திமுக கூட்டணி வெற்றிபெற கலைஞர் அவர்களின் நினைவு நாளில் சூளுரைப்போம் என உறுதி ஏற்றனர்.

கலந்து கொண்ட அனைவருக்கும் உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது இறுதியில் அமைப்பின் துணைச் செயலாளர் உளுந்தூர்பேட்டை மு.நஜீர் அகமது நன்றி கூறினார்.




தி.மு.க, அயலக அணி, குவைத் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் ஒருங்கிணைப்பில், அமைப்பின் பொருளாளர் புதுவை அ.அறிவுமணி தலைமையில் நவீன தமிழகத்தின் சிற்பி தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்விற்கு அமைப்பின் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, இணைச் செயலாளர்கள் குடந்தை சி.தியாகராஜன், ஆயங்குடி ஜா.சையது முஸ்தபா, சேகரை வெ.செல்லத்துரை. துணைச்செயலாளர்கள் திருவாரூர் ச.குமார், முத்துப்பேட்டை ம.சபரிவாசன், விழுப்புரம் ஐ.ஜஹாங்கீர், தகவல் தொழில் நுட்ப அணிச் செயலாளர் மேட்டுவிளை ஜ.ஜானவாஸ், பொறியாளர் அணி செயலாளர் திருக்கோவிலூர் அ.பொன்முடி, ஓட்டுனர் நல அணி செயலாளர் திருச்சி ஏ.ஜே.எம்.இஷாக் ஜக்கரியா, தொழிலாளர் நல அணி செயலாளர் கூத்தாநல்லூர் ஏ.ஷாகுல் ஹமீது, விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் பரங்கிப்பேட்டை ம.நசுருதீன் முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர். அமைப்பின் துணைப் பொருளாளர் திருவடத்தனூர் ஏ.எஸ்.முகமது ரஃபீக் வரவேற்றார்.